DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC No. 18 /2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | சித்ரா |
| Father's /Husband Name | : | சண்முகசுந்தரம் |
| Village | : | கொட்டையூர் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 29 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day August 2024.
R2 present. R1, R3 absent. Counsel for R1 to R3 present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

நான் MCA, M.Tech படித்துள்ளேன். கும்பகோணம் ஐயா வன்னியர் திருமண தகவல் மையம் மூலமாக எனக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த மையத்தில் நான் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அதில் நான் Up to datez Software solutionsல் team leader ஆக பணிபுரிவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள தகவல் சரிதான். மேற்படி கம்பெனியில் நான் இரண்டு ஆண்டு பணிபுரிந்தேன். மேற்படி விண்ணபத்தில் மாடி வீடு, இரண்டு பிளாட், 5 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இப்புகாரை நான் யாருக்கு எதிராக கொடுத்துள்ளேன் என்றால் சண்முகசுந்தரம். திருமணத்திற்கு பிறகு 45 நாட்கள் நான் எனது கணவருடன் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான், நான் எனது கணவர் வீட்டில் 4 மாதங்களாக வசித்து வந்தேன், 40 நாட்களுக்கு பிறகு எனது கணவர் வெளிநாடு சென்றுவிட்டார். எனது கணவர் மேல் படிப்புக்காக வெளிநாடு சென்றார் என்றால் இல்லை, வேலைக்காக சிங்கப்பூர் சென்றார். வெளிநாடு செல்வதற்கு முன்பு வரை எனது கணவருடன் எனக்கு சுமூகமான உறவு இருந்தது என்றால் சரிதான். எனது கணவரை வழியனுப்பு நான் செல்லவில்லை, எனது அப்பா, அவரது அப்பா சென்றார்கள். எனது தகப்பனாரும், எனது கணவரின் தகப்பனாரும் சுமூக உறவில்தான் இருந்தார்கள். இரு குடும்பத்தினரிடையே பிரச்சனை இல்லை என்றால் சரிதான். இன்றைய தேதியில் எனது கணவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன் என்றால் சரிதான்.

2. எனது கணவரின் தம்பி தாமோதரன் எனது தகப்பானருக்கு ரூ.5,27,000/– G–Pay மூலம் அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அந்த பணத்தில் திருமணத்திற்கு செலவு செய்தார்கள் என்றால் பாதி, பாதி இருவீட்டாரும் செலவு செய்தார்கள். நிச்சயத்தின்போது 5 பவுன், திருமணத்தின்போது தாலி செயின் எதிர் மனுதாரர்கள் வீட்டில் எனக்கு செய்தார்கள் என்றால் சரிதான். திருமாங்கள்யம் எத்தனை பவுன் என்றால் மொத்தமாக 5 பவுன் என கூறினார்கள். எனக்கு போட்ட நகைகள் மற்றும் எனது நகைகள் என்னிடம் உள்ளது என்றால் இல்லை, தாலி செயின் மட்டும் என்னிடம் உள்ளது, மற்ற நகைகள் எதிர்மனுதாரர்கள் வீட்டில் உள்ள எனது பீரோவில் உள்ளது. பீரோவின் சாவி எதிர்மனுதாரர்களிடம் உள்ளது. எனக்கும் எனது கணவருக்கும் தனிப்பட்ட பிரச்சனை இல்லை என்றால் சரிதான். வாட்ஸ்அப் பரிமாற்றங்களை தவிர எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். எனது புகுந்த வீட்டிலிருந்து திருமண விழா மற்றும் கோவில் திருவிழாவிற்காக எனது பிறந்த வீட்டுக்கு வந்தேன். அதன் பிறகு எனது புகுந்த வீட்டுக்கு நான் சென்றேன். நான் அங்கு தங்கிருந்தேனா என்றால் என்னை எனது கணவரின் அப்பா, அம்மா தங்க விடவில்லை.

(இருதரப்பினரும் சேர்ந்து வாழ தயாராக இருப்பதால் சமாதானம் பேச குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.